1973 நவம்பர் 24]

Engineering Sections of the Government Board Secondary Schools

@* 65 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the strength of the pupils in 10th and 11th Standards in Engineering Sections of the Government Board Secondary Schools is very low;

(b) if so, whether ways will be found to make additional use of the services of the teachers in Engineering sections of the Government Board Secondary Schools, as their workload is very light; and

(c) whether this Government will issue orders recognising this scheme as equal to I.T.I. or Junior Polytechnic Certificates by adding the engineering subjects like Fitting, Metal Works and Electric Wiring in accordance with the Main Craft syllabus and making them Electives in 8th and 9th Standards?

அரசாங்க போர்டு உயர்நிலைப் பள்ளிகளில் பொறியியல் கல்விப் பிரிவு

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசாங்க போர்டு உயர்நிலைப் பள்ளிகளில் பொறியியல் கல்விப் பிரிவில் மாணவர்களின் எண்ணிக்கை 10, 11-ஆம் வகுப்புகளில் மிகக் குறைவாக இருக்கிறது என்பது சரியா?

(இ) அப்படியெனில், அரசாங்க போர்டு உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள பொறியியல் கல்விப் பிரிவு ஆசிரியர்களின் போதனை நேரம் மிகக் குறைந்திருக்கும் நிலையில் அவர்களின் சேவையைக் கூடுதலாகப் பயன்படுத்த வழிமுறைகள் காணப்படுமா?

(உ) அந்த அடிப்படையில் தற்போதுள்ள மெயின் கிராப்டு பாடத்திட்டப்படி பிட்டிங், மெட்டல் ஒர்க்ஸ், எலக்டிரிக் வயரிங் போன்ற பொறியியல் பாடங்களைக் கூடுதலாகச் சேர்த்து, 8, 9 வகுப்புகளில் விருப்பப் பாடங்களாக்க செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். ஒரு சில பள்ளிகள் தவிர பெரும்பாலான பள்ளிகளில் பொறியியல் பிரிவில் மாணவர் எண்ணிக்கை 10-க்கும் குறைவாக உள்ளது.

(இ) மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும், பொறியியல் பிரிவு ஆசிரியர்களின் வேலை செய்ய வேண்டிய பாடவேளையின் எண்ணிக்கையில் குறைவில்லாததால் போதனை நேரம் குறைய வழியில்லை.

(உ) இல்லை.

Common Service Register for the Teachers

@ *66. Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have proposed to introduce the Common Service Register System for the teachers, since their service is one and the same irrespective of the places in which and administration under which they serve; and

(b) if so, when this system will be brought into force?

ஆசிரியர்களுக்குப் பொதுவான ஊழியப் பதிவேடு

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்கள் எங்கு எந்த நிர்வாகத்தின் கீழ் பணி புரிந்தாலும் அவர்கள் ஆற்றும் பணி ஒன்றாக உள்ளதால், அவர்களுக்கான ஊழியப் பதிவேடு பொதுவானதாக (Common service register) வைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆமெனில், இதை எப்போது முதல் அமுலுக்குக் கொண்டுவர உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, 1967-ஆம் ஆண்டு மே மாதம் 17-ந் தேதி ஊட்டியிலே நடைபெற்ற கல்வி மகாநாட்டிலேயே கல்வி அமைச்சர் அவர்கள் இதை (ஆசிரியர் பொது ஊழியப் பட்டியல்) ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். இன்னும் நடை முறைப்படுத்தப்படாமல் இருக்கின்றது. பரிசீலனையில் உள்ள இந்தப் பிரச்சினையை எவ்வளவு காலத்திலே நடைமுறைப்படுத்துவதற்கு முன்வருவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.